# கலைஞர் நூற்றாண்டு பூங்கா! முதல்வர் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி

இவற்றுடன் இப்பூங்காவில் உள்ள சுவர்களில் தீட்டப்பட்டுள்ள சுவரோவியங்கள் பூங்காவை மேலும் அழகுபடுத்துகின்றன. பூங்கா அனுபவத்தினை என்றென்றும் நினைவுகூரும் வகையில் நினைவு பரிசுகள் விற்கும் விற்பனை மையமும் உள்ளது.

இப்பூங்காவினை பார்வையிட நுழைவுக் கட்டணம் பெரியவர்களுக்கு ரூ.100/ சிறியவர்களுக்கு ரூ.50/ என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இதர சிறப்பு அம்சங்களை பார்வையிட தனித்தனியேகட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. ஜிப்லைனில் ஏறி சாகச பயணம் மேற்கொள்ள பெரியவர்களுக்கு ரூ.250/ சிறியவர் களுக்கு ரூ.200/ குழந்தைகள் மழயில் அமர்ந்து செல்ல ரூ.150/ என நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

பறவையகத்தில் பல்வேறு வெளிநாட்டு பறவைகளை பார்வையிட மற்றும் உணவளித்து மகிழ்ந்திட பெரியவர்களுக்கு ரூ.150/ சிறியவர்களுக்கு ரூ.75/ எனவும், மாலை நேரத்தில் இசை நீரூற்றின் கண்கவர் நடனத்தை காண பெரியவர்களுக்கு ரூ.50/ சிறியவர்களுக்கு ரூ.50/ எனவும். கண்ணாடி மாளிகையில் அரிய வகை செடிகளை பார்வையிட பெரியவர்களுக்கு ரூ.50/ சிறியவர்களுக்கு ரூ.40/ எனவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குழந்தைகள் பங்குபெறும் ஒரு சவாரி விளையாட்டுக்கு ரூ.50/ எனவும், புகைப்பட கருவிகளுக்கு (camera) ரூ.100/ எனவும், ஒளிப்பதிவு கருவிகளுக்கு (video camera) ரூ.5000/-என வும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இந்நுழைவுக்கட்டணங்கள் மூன்று மணி நேரத்திற்கு மட்டுமே செல்லத்தக்கது.

இணையதளத்தின் வாயிலாக நுழைவுகட்டணம் குறித்தான தகவல்கள் மற்றும் நுழைவுச்சீட்டினை: https://tnhorticulture.in/kcpetickets பெறலாம். விரைவுத்துலங்கல் குறியீடு வழியாகவும் நுழைவுச் சீட்டினை பெற வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

கலைஞர் நூற்றாண்டு பூங்கா அமைப்புப் பணிகள் அனைத்தும் நிறைவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு நேற்று (07.10.2024) திங்கட்கிழமை மாலை 6 மணியளவில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் திறந்து வைத்தார்.

# விமான சாகச நிகழ்ச்சி...

முதல் பக்கத் தொடர்ச்சி

இலகு ரக சூப்பர் சோனிக் போர் விமானமான தேஜஸ் மூலம் பாண்டியன் குழுவினர் நிகழ்த்திய கண்கவர் அணிவகுப்பை மெரினாவில் திரண்டிருந்த பல்லாயிரக் கணக்கானோர் ஆர்வமுடன் கண்டு களித்தனர். அனைத்து வானிலை தருணங்களிலும் போர் புரியக்கூடிய சுகோய் ரக விமானங்கள் விண்ணில் சீறிப் பாய்ந்து வியப்பில் ஆழ்த்தின.



**வானில் இதயத்தை உருவாக்கிய ஹெலிகாப்டர்கள்!**

விண்ணை அதிரவைக்கும் ஓசையுடன் புகையை கக்கியப்படி ஐந்து போர் ஹெலிகாப்டர்கள் வானில் நிகழ்த்திய சாகசம் காண் போரின் கண்களை கவரும் வண்ணம் இருந்தது. வானில் சுழன்று வந்தும் மேலும் கீழுமாக பறந்தும் ஒன்றோடு ஒன்று மோதுவதை போன்று ஹெலிகாப்டர்கள் வானில் நிகழ்த்திய சாகசம் காண் போரை மெய்சிலிர்க்க வைத்தது. வட்டமிட்ட ஹெலிகாப்டர்கள் வானில் இதயத்தை வரைந்து பார்வை யாளர்களை திகைக்க செய்தன.

hawk ரக விமானங்களின் கண்கவர் சாகசம் பொதுமக்களை வியப்பில் ஆழ்த்தியது. இதே போன்று, Hawk ரக விமானங்கள் மூலம் சூரிய கிரண் குழுவினர் சாகசம் மெய்சிலிர்க்கும் வகையில் இருந்தது.

**முதல்வர் மு.க.ஸ்டாலின் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கண்டுகளித்தனர்!**

சென்னையில் நடைபெற்ற இந்த விமான சாகச நிகழ்ச்சியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், திருமதி துர்கா ஸ்டாலின், அமைச்சர் துரைமுருகன் உள்ளிட்ட அமைச்சர் பெருமக்கள் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற, சட்ட மன்ற உறுப்பினர்கள். விமானப் படை தலைமை தளபதி ஏ.கே.சிங் உள்ளிட்ட விமானப்படை அதிகாரிகள் நேரில் கண்டுகளித்தனர்.

மெரினா கடற்கரையில் காலை 11 மணி முதல் மதியம் 1 மணி வரை நடைபெற்ற இந்த வான் சாகச நிகழ்ச்சியை பல்லாயிரக்கணக்கானோர் கண்டுகளித்தனர்.

இந்த சாதனை லிம்கா சாதனைப் புத்தகத்தில் இடம் பெற உள்ளது. இதையொட்டி, சென்னை மெரினாவில் சுமார் 8ஆயிரம் போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். பொதுமக்களின் வசதிக்காக மாநகர போக்குவரத்துக் கழகம் சார்பில் கூடுதல் பேருந்துகள். மெட்ரோ ரயில் நிர்வாகம் சார்பில் மினி பேருந்துகள் இயக்கப்பட்டன.

**பொதுமக்கள் பாராட்டு!**

சென்னை விமான சாகச நிகழ்ச்சியை காண்பதற்கு தமிழ் நாடு அரசு சிறப்பான ஏற்பாடுகள் செய்திருந்ததாக பொதுமக்கள் பாராட்டு தெரிவித்துள்ளனர்.

முதன் முறையாக நமது நாட்டில் தயாரிக்கப்பட்ட போர் ரக விமானங்கள், வீரர்களின் சாகசங்களை நேரில் கண்டுகளித்தது மெய்சிலிர்க்கும் வகையில் இருந்ததாக அவர்கள் கூறினர்.

---

500 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான

# மளிகைப் பொருட்கள் - 1000 ரூபாய்!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் அமைச்சர் எஸ்.எஸ். சிவசங்கர் வழங்கினார்!

சென்னை,அக்.8-

சென்னை கிழக்கு மாவட்டம், விவசாய தொழிலாளர் அணி துறைமுகம் மேற்கு பகுதி தி.மு.க சார்பில் பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவின், சுமப்பவர் மனதை இளைப்பாற்றுவோம்! சொன்னதைச் செய்து நிலை மாற்றுவோம்! திராவிடத் தொடர்-11வது நிகழ்ச்சியாக நேற்று முன்தினம் சென்னை, ஏழுகிணறு, குளோப் திருமண மண்டபத்தில் நடைபெற்ற நலத்திட்ட விழாவில் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் முன்னிலையில், 5வது மண்டல குழு தலைவர் பி.ஸ்ரீராமுலு தலைமையில் நடைபெற்ற விழாவில் போக்குவரத்துத்துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர் 500 சுமை தூக்கும் தொழிலாளர்களுக்கு ஒரு மாதத்திற்குத் தேவையான மளிகை பொருட்கள், லுங்கி, சட்டை, புடவை மற்றும் ரொக்கமாக ரூ.1000 ஆகியவை வழங்கி சிறப்பித்தார்.

இவ்விழாவில் எஸ்.முரளி, எஸ்.இராஜசேகர், எம்.விஜயகுமார், ஜி.எம்.தேவன், இசட்ஆசாத் எம்.சி, என்.பி.எம்.சேக்அப்துல்லா, எல்.சம்பத்குமார், பி.விஜயகுமார், இரா.கலைச்செல்வி, பா.ஜெகதீஷ், எம்.விநாயகம்,

எம்.இப்ராஹிம்கனி, பா.பிரதீப்குமார் துறைமுகம் மேற்கு/கிழக்கு பகுதி கழக நிர்வாகிகள்: மே.ஜனார்தனன், கே.ஆர்.அபரஞ்சி, ம.முத்துக்குமார், ந.சுந்தரம், எஸ்.சந்தியாகு, செ.தமிழ்வாணன், வி.சந்தானலட்சுமி, சி.ப.ஜெய ராமன். துறைமுகம் கிழக்கு / மேற்கு வட்ட கழக செயலாளர்கள்: பா.கதிரவன், மா.ஜெய்சங்கர், ஆர்.ரவிச்சந்திரன், ஜி.ராமமூர்த்தி, பா.அண்ணாதுரை, சேப்பாக்கம் வே.பா.பிரபாகரன்,

டி.சதீஷ்குமார், கதிரவன் (எ) ராஜா, எம்.பரத்குமார், கே.கவியரசு, ஆ.நா.பார்த்திபன். மாமன்ற உறப்பினர்கள்: வெ.பரிமளம் எம்.சி, ராஜேஷ்ஜெயின் எம்.சி, எல்.நவின் எம்.சி மற்றும் கழகமுன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

---

அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! மேயர் பிரியா ராஜன் தலைமை!

# திரு.வி.க.நகர் வடக்குப் பகுதியில் கர்ப்பிணிப் பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## சமூக நலன் - மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் வழங்குகிறார்!

சென்னை, அக். 8 -

சென்னை கிழக்கு மாவட்டம், திரு.வி.க.நகர் வடக்கு பகுதியில் பவள விழா ஆண்டின் கழக முப்பெரும் விழா முன்னிட்டு திராவிடத் தொடர் 14, "தாய்மை நலமாகும்! திராவிடம் பலமாகும்!!" எனும் தலைப்பில் கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா இன்று (8.10.2024-செவ்வாய்க்கிழமை) மாலை 4 மணிக்கு, ஹெம்ராஜ் பவன், புக்ஸ் ரோடு, ஓட்டேரியில் நடைபெறுகிறது.

சென்னை மாநகராட்சி மேயர் பிரியா ராஜன் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் ப.தாயகம் கவி, பகுதிக் கழகச் செயலாளர்கள் செ.தமிழ்வேந்தன், எம்.சாமிகண்ணு, 6 வது மண்டலக் குழுத் தலைவர் சரிதா மகேஷ் குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

புனிதவதி எத்திராசன் எம்.சி, பெரம்பூர் ஆர்.ராஜன், எஸ்.புஷ்பராஜ், ஜி.கிருஷ்ணகுமார் ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் பி.கீதா ஜீவன் கர்ப்பிணி பெண்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி வீராசாமி, ஜோசப் சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றிஅழகன் எம்.எல்.ஏ, இ.பரந்தாமன் எம்.எல்.ஏ, கே.எஸ்.ரவிச்சந்திரன், பி.எம்.யாழினி, சங்கரி நாராயணன், தமிழன் பிரசன்னா, பி.கே.மூர்த்தி, கே.சந்துரு, சி.மகேஷ்குமார், எஸ்.மணிமுடி, பரிதி இளம் சுருதி, எம்.விஜயகுமார், என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, வே.உமாகாந்த், கோ.ஏகப்பன், தேவஜவகர், ஜி.எம்.தேவன், புலவர் சாமி நாகப்பன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன், கூ.பீ.ஜெயின், வே.வாசு, எஸ்.ராஜசேகர், எஸ்.முரளி, டி.எஸ்.பி.ராஜகோபால், எம்.டி.ஆர்.நாகராஜ், சொ.வேலு, வி.சுதாகர், ஸ்ரீராமுலு மற்றும் மாவட்டக் கழக நிர்வாகிகள், பகுதிக் கழக நிர்வாகிகள், வட்டக் கழக நிர்வாகிகள், அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள், கழக முன்னோடிகள் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

71 வது வட்டக் கழகச் செயலாளர் மா.ருத்ர மூர்த்தி நன்றி கூறுகிறார்.

---

விமானப்படை சாகச நிகழ்ச்சிக்கு - அவர்கள் கோரியதற்கு மேலாகவே

# தமிழ்நாடு அரசால் அனைத்து வசதிகளும் செய்து தரப்பட்டன!

## மருத்துவம் - மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிக்கை!



சென்னை, அக்.8-

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் விடுத்துள்ள விளக்க அறிக்கை வருமாறு:-

சென்னையில் இந்திய விமானப் படையின் வான் வழி சாகச நிகழ்ச்சியினைச் சிறப்பாக நடத்திடத் தமிழ்நாடு அரசின் நிர்வாகரீதியிலான முழு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியை முறையாகத் திட்டமிட்டு நடத்துவதற்காகத் தலைமைச் செயலாளர் அவர்கள் தலைமையில் ஒருங்கிணைப்புக் கூட்டம் இந்திய விமானப்படை அதிகாரிகள் மற்றும் தமிழ்நாடு அரசுத் துறை அலுவலர்களுடன் ஒருமுறையும் பின்னர் துறை அளவில் பலமுறையும் நடத்தப்பட்டன.

இந்த ஆலோசனைக் கூட்டங்களில் விமானப் படை அதிகாரிகள் கோரிய அனைத்தும் கவனத்தில் கொண்டு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. நிகழ்ச்சி நடைபெறும் இடத்தில் மாநில அரசின் சார்பாக இரண்டு சுகாதாரக் குழுக்கள், போதுமான மருத்துவர்கள் மற்றும் செவிலியர்களுடன் நிறுத்தி வைக்கப்பட்டது. இது மட்டுமின்றி இந்திய இராணுவத்தின் சார்பாகவும் மருத்துவக் குழுக்கள் அமைக்கப்பட்டிருந்தன.

இது தவிர அவசர மருத்துவ உதவிக்காக 40 ஆம்புலன்சுகளும் அங்கு நிறுத்திவைக்கப்பட்டிருந்தன. போதுமான அளவு பாராமெடிக்கல் குழுக்களும் அமைக்கப்பட்டு இருந்தன. ராஜீவ் காந்தி அரசுப் பொது மருத்துவமனை உள்ளிட்ட அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் 100 படுக்கைகளும் 65 மருத்துவர்களும் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தனர்.

சென்னை பெருநகர மாநகராட்சி மற்றும் சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தின் மூலமாக மெரினா கடற்கரையில் போதுமான எண்ணிக்கையில் தற்காலிக கழிவறைகள் மற்றும் குடிநீர் வழங்கலுக்குத் தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டு இருந்தன. அதிகளவில் பொதுமக்கள் வரும் வாய்ப்பு உள்ளதைக் கருத்தில்கொண்டு 7,500 காவலர்கள் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப் பட்டனர்.

சென்னையில் இன்று நடைபெற்ற இந்திய விமானப் படையின் நிகழ்ச்சிக்கு அவர்கள் கோரியதற்கு மேலாகவே அனைத்து வசதிகளும் ஏற்பாடுகளும் தமிழ்நாடு அரசால் செய்து தரப்பட்டன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

---

சென்னை கிழக்கு மாவட்டக் கழக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில்

# 16 அணிகள் பங்கேற்ற மாபெரும் கால்பந்து போட்டி!

## அமைச்சர் பி.கே. சேகர்பாபு முன்னிலையில் - அமைச்சர் டாக்டர் மதிவேந்தன் தொடங்கி வைத்தார்!

சென்னை,அக்.8-

சென்னை கிழக்கு மாவட்டம், திமுக விளையாட்டு மேம்பாட்டு அணி சார்பில் பவளவிழா ஆண்டின் கழக முப்பெரும் விழாவின், திராவிடத் தொடர்-10வது நிகழ்ச்சியாக "களத்தில் கால்கள் விளையாடும்! நிலத்தில் வெற்றி நமதாகும்! என்ற தலைப்பில் மாபெரும் கால்பந்து போட்டி நேற்று முன்தினம் (06.10.2024), சென்னை-11, திரு.வி.க.நகர் மாநகராட்சி கால்பந்து விளையாட்டு மைதானத்தில் சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே. சேகர்பாபு மற்றும் விளையாட்டு மேம்பாட்டு அணி மாநில துணைச்செயலாளர் நிவேதா ஜெசிகா ஆகியோர் முன்னிலையில், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ம.அசோக்குமார் தலைமையில் 16 அணிகள் பங்கேற்ற மாபெரும் கால்பந்து போட்டியை ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் டாக்டர் .மதிவேந்தன் அவர்கள் துவக்கி வைத்து கோப்பையும் முதல் பரிசாக ரூ.25,000/- இரண்டாம் பரிசாக ரூ.15,000/- மற்றும் சான்றிதழ்கள் வழங்கி சிறப்பித்தார்.

இவ்விழாவில் வணக்கத்திற்குரிய மேயர் பிரியா ராஜன், கழக அயலக அணித் தலைவர், டாக்டர்.கலாநிதி வீராசாமி எம்.பி., கழக சட்டதிட்ட திருத்தக் குழு செயலாளர் இரா.கிரிராஜன் எம்.பி., முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர். ப.ரங்கநாதன், ஐ.சி.எப்.வ.முரளிதரன், எ.நாகராசன் எம்.சி., கே.சந்துரு, சி.மகேஷ்குமார், சரிதா மகேஷ்குமார் எம்.சி, தேவஜவகர், எஸ்.பன்னீர்செல்வம், எஸ்.தனசேகர், துரைகண்ணன், ஆர்.எஸ்.சித்திக் சென்னை கிழக்கு மாவட் விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர்கள்: எ.பாபுராஜ், வி.ஜெ.திலிப்ராஜ், எஸ்.வடிவேல், எம்.கமலநாதன், ஆர்.சீனிவாசன், என்.மோகன்குமார், த.விஜயகுமார், பி.ஆர். யஷ்வந்த்குமார், கே.ஜெயகுமார், சி.லதா, எம்.இளங்கோவன், எ.விஜய் மற்றும் கழக முன்னோடிகள் செயல்வீரர்கள், விளையாட்டு வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



நாகை மாவட்டம் தலைஞாயிறு ஒன்றியம் வெள்ளபள்ளம் மீனவர் கிராமத்தைச் சேர்ந்த மாரியப்பன் என்ற மீனவர் பைபர் படகில் கடலில் மீன்பிடித்து கொண்டு இருக்கும் போது கடலில் தவறி விழுந்து இறந்தார். இதையடுத்து அந்த வெள்ளப்பள்ளம் கிராமத்திற்குச் சென்ற அந்த குடும்பத்தினரை. நாகை மாவட்டக் கழகச் செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழக தலைவருமான என்.கௌதமன் நேரில் சந்தித்து ஆறுதல் கூறி நிதி உதவி வழங்கினார். உடன் தலைஞாயிறு ஒன்றியச் செயலாளரும் மாநில ஆத்மா குழு உறுப்பினருமான மகா.குமார், நாகை நகர மன்ற தலைவரும், நகர கழக செயலாளருமான இரா.மாரிமுத்து மற்றும் கழகத்தினர், கிராம பஞ்சாயத்தார்கள் உள்ளனர்.

---

கழகத் தொண்டர் அணிச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தொகுத்துள்ள

# 'கலைகளின் இதயம் கலைஞர்' நூல் வெளியீட்டு விழா!

## கழக முன்னணியினர் பங்கேற்கின்றனர்!

சென்னை, அக்.8-

கழகத் தொண்டர் அணி மாநில செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தொகுத்துள்ள 'கலைகளின் இதயம் கலைஞர்' நூல் வெளியீட்டு விழா வரும் அக்டோபர் 20 அன்று முத்தமிழ்ப் பேரவை அரங்கில் நடைபெறுகிறது.

இது குறித்து கழகத் தொண்டர் அணிக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் வருமாறு:-

வாழையடி வாழையென வந்தத் திருக்கூட்டத்தில் நானும் ஒருவன் அன்றோ என்ற சொற்றொடருக்கு ஏற்ப தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர், முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் ஆகியோரின் வழிவந்த உதயநிதி ஸ்டாலின் அவர்களை துணை முதல்வர் ஆக்கிய கழகத் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கும் அமைச்சர் பெருமக்களுக்கும் தி.மு.க. தொண்டர் அணி சார்பில் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்கி தீர்மானம் நிறைவேற்றுகிறது.

தொண்டர் அணி நடத்தும் முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நிறைவு, மாநிலச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர் தொகுத்துள்ள "கலைகளின் இதயம் கலைஞர்" நூல் வெளியீட்டு விழா 20.10.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணியளவில் இராஜா அண்ணாமலைபுரத்தில் உள்ள "முத்தமிழ்ப் பேரவை "(சத்தியா ஸ்டுடியோ எதிரில்) யில் நடைபெற உள்ள நிகழ்வில் அனைத்து மாவட்டத் தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் தவறாமல் பங்கேற்று நிகழ்ச்சியினை சிறப்பித்திட வேண்டுமென தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கழகத் தலைவர், தமிழ்நாடு முதல் அமைச்சர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் விரும்பியபடி நடந்து முடிந்த நாடாளுமன்ற தேர்தலில் கழகக் கூட்டணி 40 தொகுதிகளையும் கைப்பற்றியது போல, வருகின்ற 2026-இல் நடைபெற உள்ள சட்டமன்ற தேர்தலிலும் கழகத் தலைவரின் கட்டளையை ஏற்று அனைத்து மாவட்ட தொண்டர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அந்தந்த மாவட்டக் கழகச் செயலாளர்களுடனும், பாக முகவர்களுடனும் இணைந்து தேர்தல் பணியாற்றுவதுடன், அன்றாடம் பொதுமக்களைச் சந்தித்து கழகத் தலைவருடைய சாதனைகளை இடைவிடாமல் எடுத்துக் கூறி கழக வெற்றிக்குப் பாடுபட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்படுகிறது.

மாநிலத் தலைவர் ஜி.சுகுமாறன், மாநிலச் செயலாளர் மாஸ்டர் பெ.சேகர், மாநிலப் பயிற்சியாளர் மாஸ்டர் இ.குருதாஸ், சசிகுமார், சிவராம்குமார், வெங்கடேசன், எழில் உள்ளிட்ட தொண்டர் அணி நிர்வாகிகள் பங்கேற்றனர்.



ஈரோடு 39 வட்டத்தில் ஈரோடு கிழக்கு தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியிலிருந்து 39 லட்சம் ரூபாய் மதிப்பில் அங்கன்வாடி மையம், ரேஷன் கடை கட்டுவதற்கான பணியினை மாமன்ற உறுப்பினர் கீதாஞ்சலி செந்தில்குமார் தலைமையில் மேயர் நாகரத்தினம் சுப்பிரமணியம் துவக்கி வைத்தார். நிகழ்வில் மாநகராட்சி ஆணையர் என்.மணிஷ், துணை மேயர் வி.செல்வராஜ், தலைமை பொறியாளர் சி.விஜயகுமார், உதவி பொறியாளர் செந்தாமரை, மண்டல தலைவர் குறிஞ்சி என்.தண்டபாணி, மாமன்ற உறுப்பினர்கள் சரண்யா சங்கமேஸ்வரன், மங்கேஸ்வரி புனிதன், கேபிள் ஆர்.செந்தில்குமார், வட்ட கழக செயலாளர்கள் கே.டி.மகேஸ்வரன், பாபு (எ) ஜாபர் சாதிக், குணசேகரன், ம.தண்டபாணி, ப.தண்டபாணி காங்கிரஸ் ஈ.ஆர்.ராஜேந்திரன், ஜாபர் சாதிக் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.